தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானம் கழகம்
(நிர்வாகக் கிளை)

அனுப்புநர்

பொறிஞர் ஆ.அசோக்குமார், B.E.,
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு,
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

பெறுநர்

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்,
அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள்,

கடித எண்.053486/771/ஜி43/ஜி431/2019-2, நாள்:18.07.2019.

ஐயா,

பொருள்: நிர்வாகம் - களப்பணியாளர்கள் - மாற்றுபணி உத்தரவு (Diversion Order) — ரத்து செய்வது — குறித்து - அறிவுறுத்தல் வழங்குவது- தொடர்பாக.

பார்வை : இவ்வலுவலக கடித எண்.053486/771/ஜி43/ஜி431/2019, நாள்:11.07.2019.

-----

பார்வையில் குறிப்பிட்டுள்ள கடிதத்தின் வாயிலாக மாற்றுபணி (Diversion Orders) உத்தரவில் பணிபுரியும் களப்பணியாளர்களை அவ்வுத்தரவை ரத்து செய்து சொந்த பணியிடங்களுக்கு திருப்பி அனுப்பிட வேண்டுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

2) அதனைத் தொடர்ந்து, மாற்றுபணியில் (Diversion Orders) பணிபுரிந்து வரும் களப்பணியாளர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து மதிப்பீட்டாளர், மதிப்பீட்டு அலுவலர் (Assessment Staff & Officers), எழுத்துத்துறை சார்ந்த பணி (Provincial Staff & Officers) மற்றும், தொழில் நுட்ப பணியாளர் (Technical Assistants) பொறியாளர்கள் (Engineers) மற்றும் உள்ள **“அனைத்து பணியாளர்கள், அலுவலர்கள் ஆகியோர் அனைவருக்கும்”** வழங்கப்பட்டுள்ள மாற்றுபணி (Diversion Order) உத்தரவுகளை ரத்து செய்து அவர்கள் அனைவரையும் அவரவர் சொந்த பணியிடங்களுக்கு அனுப்பபட வேண்டும்.

…2

3) எனவே, ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள மாற்றுபணி (**Diversion Order)** உத்தரவுகள் அனைத்தையும் உடனடியாக ரத்து செய்யும்படி மறுபடியும் வலியுறுத்தப்படுகிறது. மேலும், ரத்து செய்ததற்கான அறிக்கையை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும் கடைசி நாளை காலநீட்டிப்பு செய்து 20.07.2019க்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்/---18.07.2019)
(ஆ. அசோக் குமார்)
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு

நகல்:- அனைத்து இயக்குநர்கள். ] (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.)
செயலர் / செயலகக்கிளை.]